கொடுக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையா? அப்படி இருந்தால் இப்போதாவது குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு அந்த வீடுகள் கொடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன். அத்தோடு அந்த வீடுகளை வெளியில் உள்ளவர்களுக்கு விற்பதற்கு முயற்சிகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுவும் உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குத்தான் அந்த வீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரே ஒருவருக்குத்தான், திரு. பார்வதி நாதன் என்ற ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவருக்கு, ஒதுக்கப்பட்டது. அவர் அரசுக்கு கோரிக்கை அனுப்பிபரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற்குப் பிறகு அரசு இவருக்கு மட்டும் விதிகளைத் தளர்த்தி இவருக்கு குடியிருப்பு வீடு ஒதுக்கப்பட்டது. தவிர. வீடுகளை வெளியில் உள்ளவர்களுக்கு விற்பது பற்றி எந்தத் தகவலும் அரசுக்கு வரவில்லை அப்படி வந்தால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களால் வெளியிடப்பட்ட ஆணைகள்.

* வினா எண். 292—**திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளில் முதல்நிலை பேரூராட்சிகளைத் தேர்வுநிலை பேரூராட்சிகளாக்கி, முதல் நிலை நிர்வாக அதிகாரிகளை தேர்வுநிலை நிர்வாக அதிகாரிகளாக நியமனம் செய்து பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களால் இடப்பட்ட உத்தரவு திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் அமுல்படுத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் நிறுத்தப்பட்டுள்ளதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்திலும் தக்க ஆணைகள் வெளியிட பேரூராட்சி இயக்குநருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளில் முதல்நிலை பேரூராட்சிகளை தேர்வுநிலை பேரூராட்சிகளாக்கியும், முதல்நிலை நிர்வாக அதிகாரிகளை தேர்வு நிலை அதிகாரிகளாக நியமனம் செய்தும், மாற்றியிருக்கிறார்கள். ஆனால், திருநெல்வேலி மாவட்டத்தில்

1983 மார்ச் 8]

மட்டும் ஏன் தாமதம் செய்து இன்னமும் தேர்வுநிலை அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. அதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; தலைவர் அவர்களே; திருநெல்வேலி மாவட்டத்திற்கு தக்க நடவடிக்கை எடுத்து ஆணைகள் வெளியிட இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர் நவநீதகிருஷ்ணபாண்டியன் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை முதல் நிலை பேரூராட்சிகள் தேர்வுநிலை பேரூராட்சிகளாக மாற்றப்பட்டு உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் ஆணைகள் வெளியிடப்பட்டு இருக்கின்றன. ஆகவே, இனிமேல்தான் எத்தனை முதல்நிலை பேரூராட்சிகள் தேர்வு நிலைப் பேரூராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன என்பது தெரியும்.

அரசு மருத்துவ மனைகளில் மருந்துகள் திருடுபோவதைத் தடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகள்.

* வினா எண். 317—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அரசு மருத்துவமனைகளில் மருந்து திருடி விற்றதாக மருத்துவ ஊழியர்கள் 1981 ஏப்ரலில் கைது செய்யப்பட்டு உள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்து திருடு போகாமல் இருக்க அரசு பிரத்தியேக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஒரு விவர அறிக்கை * பேரவை முன்வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ, சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் திருவொற்றியூர் மற்றும் சென்னை ராயப்பேட்டை, ஸ்டான்லி போன்ற மருத்துவ மனை

---

*633-ம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.